දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා
அமைச்சர்
Minister } 2784832

ලේකම්
செயலாளர்
Secretary } 2784811

කාර්යාලය
அலுவலகம்
Office } 2785141-50
**Fax**: 2784846

ඊමේල්/ஈ–மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය
உமது இல.
Your No. } ……………………………………

**අධ්‍යාපන අමාත්‍යාංශය**
**கல்வி அமைச்சு**
**Ministry of Education**

'ඉසුරුපාය', ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.

මගේ අංකය
எமது இல.
My No. } ED/01/26/07/01/01

දිනය
திகதி
Date } 2011-06-21

**சுற்றுநிருப இல. 2011 / 19**

சகல பாடசாலை அதிபர்களுக்கும்

## கணினி வன்பொருள் , வலையமைப்பு தீர்வு அணிகளை பாடசாலை மட்டத்தில் உருவாக்கல்

தேசிய ரீதியில் ஒவ்வொரு கல்வி வலயத்திலும் தலா 2 (இரண்டு) ஆசிரியர்களை உள்ளடக்கி ஆரம்பக்கப்பட்ட தேசிய மட்டத்திலான கணினி வன்பொருள், வலையமைப்பு தீர்வு அணியானது தனது பொறுப்புக்களையும், கடமைகளையும் திருப்திகரமாக ஆற்றியுள்ளமை, அறியப்பட்டுள்ளது.

இதனை மேலும் விரிவுபடுத்தி வளப்படுத்தும் நோக்குடனும் பாடசாலைகளின் தகவல் தொடர்பாடல் தொமில்நுட்ப அறிவை பகிர்ந்து கொள்ளவும் மாணவர் மத்தியின் ஆற்றலை மேம்படுத்தவும் **பாடசாலை மட்டத்திலான பாடசாலை கணினி வன்பொருள்** வலையமைப்பு தீர்வு அணி ஒவ்வொரு பாடசாலைகளிலும் அமைக்கப்படவேண்டும் இது கீழ் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாக செயற்படவேண்டும்.

### அணி அங்கத்தவர்கள்

தரம் - 8, தரம் - 9, தரம் - 10 ஆகிய வகுப்புகளிலிருந்து தலா 2 மாணவர் வீதம் 6 பேர் கொண்ட இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் இதில் 10 ம் தர மாணவர்கள் 11 ம் தரத்திற்கு தரமுயர்த்தப்பட்ட பின்னர் ஏற்படும் வெற்றிடத்திற்கு தரம் 8 இல் புதிதாக இரு மாணவர்களை தெரிவு செய்யவேண்டும்.

### அணிக்கான பயிற்சிகள்

ஆரம்ப பயிற்சிகள் தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பப் பாட ஆசிரியரினால் வழங்கப்படும் அதேவேளை தொடர்ச்சியான பயிற்சிகள் வலய, மாகாண தகவல் தொழிநட்ப இணைப்பாளர்களினால் கவனத்தில் எடுக்கப்பட்டு பாடசாலைகளை ஒருங்கிணைத்து தேசிய வன்பொருள் வலையமைப்பு தீர்வு அணியின் அங்கத்தவர்களின் உதவியுடன் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் இவ்வங்கத்தவர்கள் வலய, மாகாண மட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படுவதுடன் அவர்களின் தொடர்ச்சியான பங்களிப்பையும் இற்றைப்படுத்தலையும், ஒத்துழைப்பையும் கருத்தில் கொண்டு செயற்படவும்.

**<u>மாணவர்களின் மதிப்பீடு</u>**

இச்செயற்பாட்டில் உற்சாகத்துடனும். முழுமனதுடனும் , தியாகத்துடனும் பங்குபற்றும் மாணவர்களுக்கு மேலும் பயிற்சிகள் மாணவர்களின் நலன்களை மேம்படுத்தும் நோக்கில் வழங்கப்படவேண்டும். ஒரு மாணவன் அணியின் அங்கத்தவராக பயிற்சியை நிறைவு செய்த பின்னர் அதற்கான சான்றிதழ் பாடசாலை அதிபரின் கையொப்பத்துடன் மாணவனின் செயற்பாட்டை ஆய்வு செய்து வழங்கவேண்டும்.

தங்களின் பாடசாலையின் தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் சிறந்த தொழிற்பாடும், கணினி வன்பொருள் வலையமைப்பு தீர்வு அணியானது பாடசாலை மட்டத்தில் உருவாக்கப்பட்டு அதன் சிறந்த தொழிற்பாடும் இவ் அணியானது எதிர்கால சமூகத்தில் தொழில் சந்தையில் நல்ல பிரதிபலனை அடைய முடியுமென்பதாலும் தங்களின் செயற்பாடு இவ்விடயத்தில் பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

எச். எம். குணசேகர
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள்**

1. சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்
2. சகல மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள்
3. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்